# மினுவன்கொடை பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 13 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 செப்தெம்பர் 24 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மினுவன்கொடை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்டிராத ரூபா 2,158,538 பெறுமதியான மின்விசிறி மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு 2 மற்றும் 3 இன் மூலம் இரண்டு முறை மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் காணி, கட்டிடக் கணக்கு மற்றும் திரண்ட நிதியம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரண்டு உழவு இயந்திரங்களின் பெறுமதியான ரூபா 2,578,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

---

(இ) 2011 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற முச்சக்கர வண்டி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணிப்பின் ஆலோசனைச் சேவைச் செலவினமான ரூபா 505,197 தொகை மீளளிக்கப்படலாகாத போதிலும் பெறவேண்டிய அரசாங்க மானியமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(உ) ரூபா 54,150,606 பெறுமதியான நிலையான வைப்புத் தொகை மீளப் பெறுவது திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட்டு மூலதன மானியப் பெறுவனவு செலவு வைக்கப்பட்டதன் காரணமாக வருமான மற்றும் செலவுக் கணக்குகளில் மிகை காண்பிக்கப்பட்டது.

(ஊ) ஒரு கிராமத்திற்கு ஒரு வேலையின் 112 செயற்திட்டங்களுக்காக 10 சதவீதம் கையில் வைத்துக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 10,910,826 தொகைக்காக கடன்பட்டோர் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 15,850,576 தொகையான போதிலும் கணக்குகளில் இது ரூபா 15,391,082 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக 2012 திசெம்பர் 24 ஆம் திகதி ரூபா 2,500,000 தொகையான காசோலை ஒன்று வரையப்பட்டிருந்ததுடன் கணக்குகளில் இத்தொகை முதலீடாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மக்கள் வங்கியில் உள்ள நிலையான வைப்பு ரூபா 30,000,000 தொகை 2013 சனவரி 01 ஆம் திகதி முதிர்வடைவதுடன் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான பெறவேண்டிய வட்டி ரூபா 1,121,918 தொகை நிலையான வைப்புடன் கூட்டப்பட்டு முதலீடாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ஆண்டின் போது நிலையான வைப்பு வட்டி ரூபா 5,163,736 ஆன போதிலும் ரூபா 6,065,372 ஆக கணக்குகளுக்கு

எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இதன் படி ரூபா 901,636 ஆல் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டிற்காக நிலுவையாகக் காணப்பட்ட நிலையான வைப்பு வட்டித் தொகையான ரூபா 2,003,515 மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றமை நிலுவையான வட்டிக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையான வட்டி ரூபா 1,443,822 ஆன போதிலும் இது ரூபா 2இ749இ788 ஆகக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தமையால் அக் கணக்கு ரூபா 1,305,966 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க) காணி, கட்டிட மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையான ரூபா 857,144 ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அக் கணக்கு அதே தொகையால் அதிகரித்தும் இத் தொகையில் ரூபா 593,144 தொகை முன்னைய ஆண்டிற்கு உரித்தானமையால் காணி, கட்டிடக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு திரண்ட நிதியத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. இதனால் காணி, கட்டிட மேம்பாட்டுக் கணக்கு ரூபா 1,450,288 தொகையால் குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 593,144 தொகையால் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) பெறுமதி சேர் வரிக் கணக்கின் நிறைவேற்றல் வரியில் ரூபா 1,139,439 தொகை தீர்க்கப்பட்ட வரித்தொகை கழிக்கப்பட வேண்டிய போதிலும் கழிக்கப்பட்டிராமையால் அக் கணக்கு அத் தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 317,281,795 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றிற்கு உரித்தான பட்டோலையின் படியான மீதிகளின்

கூட்டுத்தொகை ரூபா 307,638,446 ஆகக் காணப்பட்டது. இதன் படி ரூபா 9,643,349 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 33,256,184 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,848,894 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,506,754 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 20,987 | 22,511 | 8, 347 |
| (ii) | வாடகை | 2,237 | 1,876 | 526 |
| (iii) | ஏனைய வருமானம் | 1,610 | 815 | 1,363 |

### 2.2.2 வீதவரி

மாபோதல, உடுகம்பொல மற்றும் மினுவங்கொட உப அலுவலகங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,350,944 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 1 முதல் 5 ஆண்டுகள் வரை நிலுவையான மீதி ரூபா 5,051,847 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) உடுகம்பொல உப அலுவலகத்தில் 2004 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படுவதற்குள்ள நிலுவையான வாடகை மீதி ரூபா 52,376 ஆகக் காணப்பட்டதுடன் 2007 ஆம் 2008 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலுவையாகக் காணப்பட்ட கடை வாடகை மீதி ரூபா 42,550 ஆகக் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆகக் குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கடை வாடகை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் கடைகள் தொடர்பாக இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் வருட ஆரம்பம் முதல் இறுதி வரை ரூபா 10 மில்லியன் முதல் ரூபா 66 மில்லியன் வரையான பணமும் இலங்கை வங்கியின் சேமிப்புக் கணக்கில் ரூபா 4 மில்லியன் முதல் ரூபா 15 மில்லியன் வரையான பணமும் காணப்பட்டதுடன் இப் பணம் சபைக்கு உயர் வருமானத்தை ஈட்டத்தக்க வகையில் நிலையான வைப்பில் அல்லது ஏழு நாள் அழைப்பு வைப்பில் முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்